# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1821/31 - 2013 ජූලි මස 31 වැනි බදාදා - 2013.07.31

*1821/31 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு யூலை மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 24/51*

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின்கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்படும் ஒழுங்குவிதிகள்.

குமார வெல்கம,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு,
2013, யுலை 25.

ஒழுங்கு விதிகள்

1. இவ்வொழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 1ஆம் இலக்க, மோட்டார் வாகன (மோட்டார் முச்சக்கரவண்டி) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. (1) வாடகைக்கு அல்லது வேறு வகையில் ஆட்களை அல்லது பொருட்களை ஏற்றி இறக்கும் நோக்கத்திற்காக மோட்டார் முச்சக்கர வண்டியினைப் பயன்படுத்துகின்ற மோட்டார் முச்சக்கர வண்டியொன்றின் ஒவ்வொரு உரிமையாளரும் மோட்டார் முச்சக்கர வண்டியின் பயணிகளுடைய அறைக்கு செல்லும் வலப்பக்க நுழைவாயில் பயணி ஒருவரினால் உள்வருவதை அல்லது வெளிவருவதை தடுப்பதற்காக பகுதியளவில் அல்லது நிரந்தரமாக மூடப்பட்டிருத்தல் வேண்டும் என்பதை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) (அ) மோட்டார் முச்சக்கர வண்டியொன்றின் சாரதி ஒருவர் மோட்டார் முச்சக்கர வண்டியின் வலப்பக்கத்தினால் ஏறி இறங்குவதன் மூலம் மோட்டார் முச்சக்கர வண்டிக்குள் உள்நுழைவதற்கோ அல்லது வெளிச்செல்வதற்கோ எவரேனும் பயணியை அனுமதித்தல் ஆகாது.

(ஆ) ஆளெவரும் மோட்டார் முச்சக்கர வண்டியின் இடப்பக்கத்தினால் ஏறி இறங்குவதன் மூலம் மோட்டார் முச்சக்கர வண்டிக்குள் உள்நுழைவதோ அல்லது வெளிச்செல்லுதலோ ஆகாது.

(3) மோட்டார் முச்சக்கர வண்டியொன்றின் சாரதி ஒருவர் 3 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் அனுமதிக்கக்கூடியவாறான ஆட்களின் எண்ணிக்கையை விட கூடுதலாக ஏற்றிச் செல்லுதல் ஆகாது என்பதுடன் மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றில் ஏற்றிச் செல்லப்படவேண்டிய ஆட்களின் எண்ணிக்கை மோட்டார் முச்சக்கர வண்டியின் வெளிப்புற பின்புற அண்மைப்பக்கத்தில் எண் அடிப்படையிலும் துலாம்பரமாகவும் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்.

(4) பந்தி (3) இன் நோக்கத்திற்காக, பன்னிரெண்டு வயதிற்குட்பட்ட இரண்டு சிறுவர்கள் பயணிகளின் எண்ணிக்கையை கணக்கிடும் நோக்கத்திற்காக ஒரு பயணியாக கணக்கிடப்படுதல் வேண்டும்.



இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

3. மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் உரிமையாளர் ஒருவர்–

(அ) மோட்டார் முச்சக்கரவண்டி ஒன்றின் எல்லா ஆசனங்களின் தாங்குகைகளும் குறித்த நிலையில் உறுதியாக இருத்தல் வேண்டும் எனவும் ஒவ்வொரு ஆசனத்தின் முன் வழியாக நேர்கோடு ஒன்றில் அளவிடப்பட்ட குறைந்தபட்சம் 382 மில்லிமீற்றர்கள் ஒவ்வொரு பயணிகளுக்கும் அனுமதிக்கப்படல் வேண்டும் எனவும்,

(ஆ) மோட்டார் முச்சக்கர வண்டியின் ஏதேனும் படியின் முடிவிடத்திற்கும் ஒரு ஆசனத்தின் முன் முடிவிடத்தின் ஊடான செங்குத்தனிப் பாதைக்கும் இடையிலான மிகக் குறைந்த தூரம் 230 மில்லி மீற்றர்களை விட குறைவாக இருத்தலாகாது.

(இ) நிலமட்டத்திலிருந்து மோட்டார் முச்சக்கர வண்டியின் உயரம் அதன் அகலத்தின் நூற்று ஐம்பது சதவீதத்தை விஞ்சுதலாகாது.

(ஈ) மோட்டார் முச்சக்கர வண்டிக்கு ஏற்றப்பட்ட பண்டங்கள் அதன் முன்புற முடிவிலிருந்து அல்லது பின்புற முடிவில் இருந்து 75 சென்ரி மீற்றருக்கு மேற்பட்டு முன்னீட்டி இருத்தல் ஆகாது.

(உ) மோட்டார் முச்சக்கர வண்டிக்கு பொருத்தப்பட்ட ஆசனத்தின் ஒரு பின்தாங்கிக்கும் மற்றைய பின்தாங்கிக்கும் இடையிலான ஆகக் குறைந்த தூரம் 660 மில்லிமீற்றரை விட குறைவாக இருத்தல் ஆகாது, அத்துடன்

(ஊ) ஒவ்வொருவருக்கும் நேர் எதிரான ஆசனங்கள் மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றிற்கு பொருத்தப்படுதலாகாது.

4. மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதி தவிர்ந்த வேறு ஆளெவரும் சாரதி அறையில் அல்லது சாரதியின் ஆசனத்தில் ஏற்றப்படுதலாகாது.

5. மோட்டார் முச்சக்கர வண்டியானது மணித்தியாலத்திற்கு 40 கிலோ மீற்றருக்கு மேலதிகமான வேகத்தில் செலுத்தப்படுதல் ஆகாது.

6. மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் உரிமையாளர் அல்லது சாரதி ஆனவர் அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டி வீதியில் சென்று கொண்டிருக்கும் வேளையில் ஏதேனும் விளம்பரம், துண்டுப்பிரசுரம் அல்லது கைத்துண்டை விநியோகிப்பதற்கு எவரேனும் ஆளை அனுமதித்தலாகாது.

7. நகர்ந்து கொண்டிருக்கும் மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் சாரதி ஏனைய வீதிப்பாவனையாளருக்கு இடைஞ்சலை அல்லது தொல்லையை ஏற்படுத்துமளவிற்கு ஒலியை வெளிப்படுத்தும் ஏதேனும் சாதனம் அல்லது கருவியை பயன்படுத்துதலாகாது அல்லது பயன்படுத்தப்படச் செய்வித்தல் ஆகாது. ஒலியானது மோட்டார் முச்சக்கர வண்டியினுள் அடக்கப்பட்டிருக்கின்றது எனவும் அதனில் பயணிக்கின்றவர் மட்டும் கேட்பதற்கென உட்கருதப்பட்டது எனவும் உறுதிப்படுத்துவதற்கு ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

8. (1) மோட்டார் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் அல்லது சாரதி ஆனவர் –

(அ) எந்த வேகத்தில் மோட்டார் முச்சக்கர வண்டி செலுத்தப்படுகின்றதோ அந்த வேகத்தை மோட்டார் முச்சக்கர வண்டி சாரதிக்கு எல்லா நேரங்களிலும் தெளிவாக சுட்டிக் காட்டுவதற்கு அத்தகைய நிலை ஒன்றில் மோட்டார் முச்சக்கர வண்டிக்கு கதிமானி பொருத்தப்பட்டிருக்கின்றதெனவும்,

(ஆ) மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதி மோட்டார் முச்சக்கர வண்டியின் முன்பக்கத்திற்கு தடையற்ற பார்வையைப் பெறக்கூடும் என அத்தகைய முறை ஒன்றில் மின்னியல் அல்லது இலத்திரனியல் தொழிற்பாட்டு வளித்திரைத் துடைப்பம் பொருத்தப்பட்டிருக்கின்றது எனவும்,

(இ) வாயுவியக்கு வளையம் பொருத்தப்பட்ட மோட்டார் முச்சக்கர வண்டி ஒவ்வொன்றும் வீதியில் பயன்படுத்துகின்ற சமயத்தில் குறைந்தபட்சம் ஒரு மாற்றுசில்லையும் வேறு வேறு சாதனங்களையும் கொண்டு செல்லுதல் வேண்டும். ஆகவே அது ஒரு சில்லுடன் அல்லது அச்சுடன் விரைவாக பொருத்தக்கூடிய ஆற்றலைக் கொண்டதாகும் என்பதுடன் இரண்டு வேறுபட்ட அளவு வாயுவிலக்கு வளையத்துடன் பொருத்தப்பட்ட அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டியும் ஒவ்வொன்றும் அதே முறையில், ஒவ்வொரு அளவிலும் குறைந்தபட்சம் ஒரு மாற்று காற்றடித்த வளையத்தைக் கொண்டு செல்லுதல் வேண்டும் எனவும், அத்துடன்

(ஈ) வானிலை நிலைமைகளிலிருந்து சாரதியையும் பயணிகளையும் பாதுகாப்பதற்கு மறைப்பு பொருத்தப்படுதலும் வேண்டும்.

(2) மோட்டார் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் பின்வரும் மின்னியல் முறைமைகள் மோட்டார் முச்சக்கர வண்டிக்கு பொருத்தப்பட்டிருக்கின்றது எனவும் அவை நல்ல நிலைமையில் உள்ளன எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(அ) இரண்டு வெளிப்புற பார்வைக் கண்ணாடிகள் ;

(ஆ) நேர் மற்றும் தாழ்ந்த ஒளிக்கற்றைகளுடன் கூடிய தலைமை விளக்குகள் மற்றும் காட்டி ;

(இ) பின்புற அல்லது நிறுத்துதல் விளக்கு;

(ஈ) பக்கத் திசைக்காட்டி விளக்கு;

(உ) பின்நோக்கிச் செல்கை விளக்கு;

(ஊ) சாரதி அறை மற்றும் பயணிகள் அறைக்கான இரண்டு உட்புற விளக்கு;

(எ) தரிப்பிட விளக்குகள் ; அத்துடன் ;

(ஏ) குழல் ;

9. மோட்டார் முச்சக்கர வண்டியானது கட்டணம் ஒன்றுக்காக அல்லது வெகுமதி ஒன்றுக்காக ஆட்கள் அல்லது பண்டங்களைக் கொண்டு செல்லும் நோக்கத்திற்காகப் பயன்படுத்துகின்றவிடத்து–

(அ) மோட்டார் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் அல்லது சாரதி, மோட்டார் வாகனச் சட்டத்தின் 196 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் தகுதிச் சான்றிதழினை வழங்குவதற்காக முதலாவது பதிவுசெய்தலில் இருந்து இரண்டு வருடங்கள் காலாவதியான பின்னர் ஆண்டுதோறும் மோட்டார் முச்சக்கர வண்டியினை பரிசோதிக்கப்படச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அத்தகைய சான்றிதழ் வழங்குவதற்காக பயனுறும் திகதியானது ஆணையாளர் தலைமையதிபதியினால் வெளிப்படுத்தப்படல் வேண்டும் ;

(ஆ) பின்வரும் தகவல்கள் பயணிகளுக்கு தெளிவாகத் தெரியக்கூடியளவிற்கு சாரதி ஆசனத்தின் பின்பக்கம் வெளிக்காட்டி வைக்கப்பட்டிருத்தல் வேண்டும் ;

(i) பதிவு இலக்கம் ;

(ii) சாரதியின் பெயரும் வாகனம் செலுத்தும் உரிம இலக்கமும் ;

(iii) சாரதியின் புகைப்படம் ஒன்று அளவு: 65'' x 50'' ;

(iv) அதிகார சபையில் மற்றும் கழகத்தில் அல்லது ஒன்றியத்தில் பதிவுசெய்த இலக்கம் ;

(v) அவசரகால நிலைமையில் அறிவிப்பதற்கான தொலைபேசி இலக்கங்கள் ;

(இ) மோட்டார் முச்சக்கரவண்டி ஒன்றின் சாரதி கடமை நேரத்தின் போதான எல்லா நேரங்களிலும் –

(i) மரியாதையான மற்றும் ஒழுங்கான முறையில் நடந்துகொள்ளுதல் வேண்டும் ;

(ii) புகைத்தல் ஆகாது ;

(iii) வாடகைக்கு அமர்த்தியவரால் அவர் விடுவிக்கப்படுவதற்கு முன்னர் வாடகைக்கு அமர்த்துதலை முடிவுறுத்தலாகாது ;

(iv) பயணிகளினால் வேறுவகையில் தேவைப்படுத்தினாலன்றி மிகக்குறைந்த நேரத்தினுள் மிகக் குறைந்த சாத்தியமான மார்க்கம் மூலம் அவர்களது சேருமிடங்களிற்கு பயணிகளை ஏற்றிச் செல்லுதல் வேண்டும் ;

10. (1) வாடகைக்கு விடும் மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றினைப் பயன்படுத்துகின்ற பயணி ஒவ்வொருவரும் அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதியால் அவ்வாறு தேவைப்படுத்தப்படின், அவர் செல்வதற்கு உட்கருதுகின்ற பயணத்தை வெளிப்படுத்துதல் வேண்டும். கோரிக்கையின் மேல் வாடகை முச்சக்கர வண்டி மானியில் பதிவுசெய்யப்பட்டவாறு அத்தகைய பயணம் முழுவதற்குமான அத்தகைய கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

(2) அத்தகைய கட்டணக்கொடுப்பனவின் மேல், அப்பயன்பட பற்றுச்சீட்டொன்றை வழங்குதல் அத்தகைய மோட்டார் முச்சக்கரவண்டிச் சாரதியின் கடமையாதல் வேண்டும். அத்தகைய பற்றுச்சீட்டு ஆனது அனைத்து அவசியமான தகவல்களையும் உள்ளடக்குதல் வேண்டும்.

11. மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் சாரதி எவரும் தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் அல்லது வேறு ஏதேனும் எழுத்தலான சட்டத்தின்கீழ் தண்டனை விதிக்கப்படற்பாலதான ஏதேனும் தவறு சம்பந்தமாக அல்லது அதனை முன்னெடுத்துச் செல்வதற்காக தனது அறிவுடன் தனது மோட்டார் முச்சக்கர வண்டியை பயன்படுத்தப்படச் செய்வித்தல் ஆகாது அல்லது அனுமதித்தல் ஆகாது.

12. மோட்டார் முச்சக்கர வண்டியின் சாரதி, ஒவ்வொரு பயணத்தையும் பூர்த்திசெய்வதன்மேல் எவரேனும் பயணியினால் சடுதியாக விட்டுச்சென்ற எவையேனும் பொருட்களுக்காக மோட்டார் முச்சக்கர வண்டியை தேடிப்பார்த்தல் வேண்டும். அத்தகைய பொருட்கள் எவையேனும் கண்டுபிடிக்கப்பட்டால், அது உரிமையாளரினால் உடனடியாக உரிமை கோரப்படாவிடின், சாரதி தகாத காலதாமதமின்றி அருகிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு அதை எடுத்துச்சென்று, அத்தகைய பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரிக்கு அதை வழங்குதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பொருள் பெறப்பட்டதென்பதனை ஏற்றுக்கொள்ளுதலும் வேண்டும்.

13. மோட்டார் முச்சக்கரவண்டி ஒவ்வொன்றும் சாரதிக்கு போதுமான வசதியையும் கட்டுப்பாட்டுக் கருவிகளை இலகுவாக அணுகி விரைவாக இயக்குவதற்கும் என அவ்வாறு வடிவமைக்கப்படுதல் வேண்டும். சாரதிக்கான தங்குமிடவசதியானது காலநிலை தொடர்பான அம்சங்கள் மற்றும் வீதியின் தடையற்ற நோக்கு என்பவற்றிலிருந்து போதுமான பாதுகாப்பை அளிக்கும் வகையில் ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.

14. (1) மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றின் உரிமையாளர் ஒருவர் மோட்டார் முச்சக்கர வண்டியின் உற்பத்தியாளரினால் அதன்மீது அடையாளமிடப்பட்ட விவரணமான தகவல் தவிர எழுத்துக்கள், எண்கள் அல்லது இலக்கங்கள் எதுவும் மோட்டார் முச்சக்கர வண்டியின் முன்புறத்தின் மீதும் பின்புறத்தின் மீதும் அடையாளமிடப்படலாகாது என உறுதிப்படுத்துதல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், கட்டணமும் வேறு தகவலும் மோட்டார் முச்சக்கர வண்டியின் முன்புறத்தின் மீதும் பின்புறத்தின் மீதும் அடையாளமிடப்படுதல் வேண்டும்.

(2) கட்டணமானது, திசைக்காட்டியின் மேல் மோட்டார் முச்சக்கர வண்டியின் அருகுப்பக்கத்தில் வெளிக்காட்டப்படுதல் வேண்டும்.

(3) மோட்டார் வாகனச் சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்குவிதியின் மூலம் குறிப்பிடப்படுவதற்கு தேவைப்படும் ஏதேனும் தகவல், ஆணையாளர் தலைமையதிபதியினால் எழுத்திலான முன் அங்கீகாரத்துடன் அடையாளமிடப்படல் வேண்டும்.

15. (1) வாடகைக்கு அல்லது வேறுவகையில் ஆட்களை அல்லது பொருட்களை ஏற்றி இறக்குவதற்காக மோட்டார் முச்சக்கர வண்டி ஒன்றினைப் பயன்படுத்துகின்ற உரிமையாளர் ஒருவர் மோட்டார் முச்சக்கர வண்டியுடன் வாடகை மோட்டார் முச்சக்கர வண்டி மானி ஒன்றை பொருத்துதல் வேண்டும்.

(2) மோட்டார் முச்சக்கர வண்டிக்கு பொருத்தப்படும் வாடகை முச்சக்கர வண்டி மானி ஒன்று -

(அ) ஆணையாளர் - தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்படும் நியம வகை ஒன்றாக இருத்தல் வேண்டும்.

(ஆ) பின்வருவன தொடர்பாக ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும் -

(i) வெளித்தோற்றம், பொதுவான செயற்பாடு மற்றும் அது நேரம், தூரம் என்பனவற்றை செம்மையாகப் பதிவுசெய்ததா என்பதை ஆய்ந்தறிதல், அத்துடன்

(ii) இவ்வொழுங்குவிதியில் நியமவகை அங்கீகாரத்துடன் ஒத்திசைதல்.

(3) மோட்டார் முச்சக்கர வண்டியின் உரிமையாளர் ஒவ்வொருவரும் வாடகை முச்சக்கர வண்டி மானியை பரிசோதிக்கச் செய்வித்தல் வேண்டும் என்பதுடன் அப்பொருள்பட வழங்கப்பட்ட பற்றுச்சீட்டானது மோட்டார் முச்சக்கர வண்டிக்குப் பொதுத்தப்படுதலும் வேண்டும்.

*(4) வாடகை முச்சக்கர வண்டி மானியின் எல்லா அம்சங்களையும் பரீட்சித்த பின்னர், அது அடைப்புகளை உடைக்காமல் அதன் உட்புற பாகங்களுடன் தலையிட முடியாத அல்லது அடையமுடியாத அத்தகைய முறையில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகரமளிக்கப்பட்ட அலுவலரினால் அடைக்கப்படுதல் வேண்டும்.*

*(5) மோட்டார் முச்சக்கரவண்டிக்கு பொருத்தப்பட்ட ஒவ்வொரு வாடகை முச்சக்கரவண்டி மானியும் குறைந்தபட்சம் ஒவ்வொரு பன்னிரண்டு மாதங்களுக்கு ஒரு தடவையோ அல்லது எவையேனும் திருத்தங்கள் அல்லது செம்மைப்படுத்தல்கள் என்பவற்றுக்காக அடைப்புகள் அகற்றப்பட்டிருப்பின் அதற்கு முன்னரோ ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அலுவலரினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் பரீட்சிக்கப்படல் வேண்டும். மதிப்பாராய்தல் சான்றிதழ் ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் வழங்கப்படுதல் வேண்டும்.*

*(6) ஆணையாளர் தலைமையதிபதியின் முன்னங்கீகாரமின்றி ஏதேனும் நோக்கத்திற்காக வாடகை முச்சக்கர வண்டி மானியில் இருந்த அடைப்புகள் அகற்றப்படுதலோ அல்லது இடையில் புகுந்து மாற்றம் செய்தலோ ஆகாது.*

*(7) வாடகை முச்சக்கர வண்டி மானி ஒவ்வொன்றும் மோட்டார் முச்சக்கரவண்டியின் வடிவமைப்பைக் கருத்திற் கொண்டு வாடகைக்கு எடுப்பவருக்குத் தெளிவாக தெரியக்கூடிய வகையிலும், வாடகை எடுப்பவரினால் சாரதியினால் வாசிக்கக்கூடியதான தன்மையான வகையிலும் மோட்டார் முச்சக்கரவண்டியின் உட்கட்டமைப்பை நோக்கி முகப்புடனும் முகப்புத்தட்டுடனும் பொருத்தப்படுதல் வேண்டும். அல்லது எழுத்தில் ஆணையாளர் தலைமையதிபதியினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேனும் பொருத்தமான நிலையிலும் பொருத்தப்படுதல் வேண்டும்.*

*(8) மோட்டார் முச்சக்கரவண்டி ஒவ்வொன்றும் வாடகை முச்சக்கர வண்டி மானியை ஒளிரச் செய்யக்கூடிய வகையில் அவ்வாறு பொருத்தப்பட்ட ஒளிவிளக்கு ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*(9) எவரேனும் ஆளினால் வாடகைக்கு எடுக்கப்படும் மோட்டார் முச்சக்கரவண்டி அதில் ஏற்படும் குறைபாடு காரணமாக தொடர்ந்து செல்வதற்கு முடியாதிருக்கும் பட்சத்தில், சாரதி வாடகை முச்சக்கர வண்டி மானியை நிறுத்துதல் வேண்டும் என்பதுடன் அது நிறுத்தப்பட்டுள்ளது என குறித்துக்காட்டுதலும் வேண்டும். மோட்டார் முச்சக்கரவண்டி பயணிகளின் சம்மதத்துடன் அதனது பயணத்தை ஆரம்பிக்கும் வரை வாடகை முச்சக்கர வண்டி மானியை மீள தொடக்குதல் ஆகாது.*

*(10) மோட்டார் முச்சக்கரவண்டியின் சாரதி எவரும் அம்முச்சக்கர வண்டி வாடகைக்கு கிடைக்கும் என வாடகை முச்சக்கர வண்டி மானி குறித்துக் காட்டுகின்ற அதேவேளை நியாயமான ஏதுக்கள் இன்றி மோட்டார் முச்சக்கர வண்டியை வாடகைக்கு விடுவதை மறுத்தல் ஆகாது.*

*(11) மோட்டார் முச்சக்கரவண்டி ஒன்றின் உரிமையாளர் அத்தகைய வாடகை முச்சக்கர வண்டி மானியின் பயன்பாட்டை தடுக்கும் கட்டளையை ஆணையாளர் தலைமையதிபதியினால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஆக்கப்பட்டிருப்பின் ஏதேனும் வாடகை மோட்டார் முச்சக்கரவண்டி மானியை பயன்படுத்தல் ஆகாது. அதனுடன் அத்தகைய வாடகை முச்சக்கர வண்டி மானியின் விடயத்தில் மோட்டார் முச்சக்கரவண்டியிலிருந்து உடனடியாக அகற்றப்படல் வேண்டும். அத்தகைய மோட்டார் முச்சக்கரவண்டியின் உரிமையாளர் அங்கீகரிக்கப்பட்ட வாடகை முச்சக்கர வண்டி மானி மீளப் பொருத்தப்படும் வரை வாடகைக்குச் செல்லும் செயற்பாட்டிலிருந்து அத்தகைய மோட்டார் முச்சக்கர வண்டியை மீளப்பெறுதல் வேண்டும்.*

*16. (1) வாடகை முச்சக்கர வண்டி மானியின் நியம வகையை அங்கீகரிப்பதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஆணையாளர் தலைமையதிபதிக்கு செய்யப்படல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஒவ்வொரு விண்ணப்பமும் பின்வருவனவற்றுடன் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும்.*

*(அ) வாடகை முச்சக்கர வண்டி மானியின் இரண்டு பூர்த்தி செய்த மாதிரிகள் ;*

*(ஆ) வாடகை முச்சக்கர வண்டி மானியின் உற்பத்தியும் உற்பத்திசெய்த நாடும் ;*

*(இ) வாடகை முச்சக்கர வண்டி மானியின் பொறிமுறை வரைபும் விபரமான விபரணமும் ;*

*(ஈ) அளத்தல் அலகு மற்றும் நியம சேவைகள் திணைக்களத்தினால் அல்லது ஆணையாளர் தலைமையதிபதியினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு அரசாங்க நிறுவகத்தினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ;*

*(உ) ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவர் எந்த உருப்படிகளை கிடைக்கக்கூடியன வாக்கும்படி எழுத்தில் விண்ணப்பகாரரைப் பணிக்கலாமோ அந்த வேறு ஏதேனும் உருப்படிகள் ;*

*(2) அங்கீகாரத்தை நாடுவது தொடர்பில் வாடகை முச்சக்கர வண்டி மானி ஒவ்வொன்றும் தொழில்நுட்ப தேவைப்பாடுகளுடன் அது இணங்குகின்றதா என ஆய்ந்தறிவதற்கு வெளிப்படுத்தல் சோதனை ஒன்றிற்கு அமைந்ததாக்கப்படுத்தப்படல் வேண்டும். பரிசோதனை அலுவலர் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் பரிசோதனையின்போது விளைவிக்கப்படும் ஏதேனும் சேதங்களுக்கு பொறுப்பாக இருக்கமாட்டார்.*

*(3) விண்ணப்பதாரி வாடகை முச்சக்கர வண்டி மானியுடன் நெருங்கிய தொடர்பான ஆள் ஒருவரினால் விபரித்துக்காட்டப்பட வேண்டிய அதன் செயற்பாட்டுக்காக ஆணையாளர் தலைமையதிபதி அல்லது பரிசோதனை அலுவலரினால் பணிக்கப்பட்டவாறு ஒழுங்குகளைச் செய்தல் வேண்டும்.*

*(4) விண்ணப்பதாரியானவர், ஆணையாளர் தலைமையதிபதியினால் தேவைப்படுத்தப்பட்ட வகையான வாடகை முச்சக்கர வண்டி மானி பொருத்தப்பட்ட மோட்டார் முச்சக்கரவண்டி ஒன்றின் செய்முறைப் பரீட்சை நோக்கத்திற்காக எழுத்தில் ஆணையாளர் தலைமையதிபதியினால் குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்சம் ஒருநாள் அல்லது ஏதேனும் காலப்பகுதிக்கு வழங்குதல் வேண்டும்.*

*(5) வாடகை முச்சக்கர வண்டி மானி ஒவ்வொன்றும்:*

*(அ) நேரத்தைக் கொண்டும் தூரத்தைக்கொண்டும் கணிப்பிடப்பட்ட கட்டணத்தொகையை அதன் முகப்பின் மீது பொருத்தமான நீள்துவாரம் குறித்துக் காட்டும் வகையிலும், அத்துடன்*

*(ஆ) வாடகை முச்சக்கர வண்டி மானி செயற்பட்டுக் கொண்டிருக்கிறதா இல்லையா என குறித்துக்காட்டக்கூடிய கொடி ஒன்று மீற்றர் ரக்சியின் முகப்பில் குறித்துக் காட்டுபவராக இருக்கும் வகையிலும் அமைக்கப்படல் வேண்டும்.*

*(6) (அ) முகப்பில் காட்டப்பட்ட எழுத்துக்களும் எண்களும் நியாயமான அளவில் இருத்தல் வேண்டும் என்பதுடன் வாடகைக்கு பெற்றுக்கொண்டவரினால் சுலபமாக வாசிக்கப்படுவதற்கு ஏற்றவகையில் பொருத்தப்பட்டிருத்தலும் வேண்டும், அத்துடன்*

*(ஆ) வாடகை முச்சக்கர வண்டி மானியிலும் அதன் அடியிலும் காட்டப்பட்ட எல்லா எழுத்துக்களும் எண்களும் அவற்றை தெளிவாக வாசிக்கக்கூடியதாக்கும் வகையில் அத்தகைய அளவில் அத்தகைய நிறங்களிலும் இருத்தல் வேண்டும்.*

*(7) மாகாணம் ஒன்றில் ஏதேனும் வீதிக்கு வாடகைக்கு அமர்த்தப்பட்ட ஏதேனும் மோட்டார் முச்சக்கர வண்டிக்கான ஆகக்கூடிய கட்டணம் கொள்கை ஒன்றின் அடிப்படையிலான கட்டண மீளாய்வுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்ட அல்லது விலைச்சூத்திரத்திற்கிணங்க கணிப்பிடப்பட்ட தொகை ஒன்றாதல் வேண்டும்.*

*17. (1) கட்டண மீளாய்வுக் குழுவானது பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*(அ) தவிசாளராக இருக்க வேண்டியவரான போக்குவரத்து என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் ;*

*(ஆ) அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நிதி அமைச்சின் பிரதிநிதி ஒருவர்;*

*(இ) அத்தகைய அமைச்சரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட் மாகாண சபையின் அமைச்சு பிரதிநிதி ஒருவர்;*

*(ஈ) அத்தகைய ஆணைக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட தேசிய போக்குவரத்து ஆணையாளர் குழுவின் பிரதிநிதி ஒருவர்;*

*(உ) பொலிசுப் பரிசோதகர் தலைமையதிபதியினால் பெயர்குறித்த நியமிக்கப்பட்ட இலங்கைப் பொலிசுப் பிரதிநிதி ஒருவர்;*

*(ஊ) உள்ளூராட்சி திணைக்களத் தலைவரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி திணைக்கள பிரதிநிதி ஒருவர்;*

*(எ) அத்தகைய அதிகாரசபையினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட நுகர்வோர் பாதுகாப்பு அதிகாரசபையின் பிரதிநிதி ஒருவர்; அத்துடன்*

*(ஏ) அமைச்சினால் நியமிக்கப்பட்ட பொதுப் போக்குவரத்து துறையில் பரந்த அறிவு, அனுபவம் மற்றும் தகைமைகளைக் கொண்டுள்ள ஆட்களாக இருக்க வேண்டியவர்களான இரண்டு பிரதிநிதிகள்.*

(2) பந்தி (ஏ) வின் கீழ் நியமிக்கப்படுகின்ற கட்டண மீளாய்வுக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொருவரும் அமைச்சரினால் முன்னரே அவர் பதவி வறிதாகியிருந்தாலன்றி அல்லது பதவியிலிருந்து அகற்றப்பட்டிருந்தாலன்றி மூன்று வருடங்களை விஞ்சாத அத்தகைய காலப்பகுதிக்கு பதவி வகித்தல் வேண்டும். அத்தகைய உறுப்பினர் மீளநியமிப்பதற்கு தகுதியுடையவராதலும் வேண்டும்.

18. (1) விலைச் சூத்திரம் ஒன்றை உருவாக்குதலும் போக்குவரத்து அமைச்சரினால் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளுதலும் கட்டண மீளாய்வுக் குழுவின் கடமையாதல் வேண்டும்.

(2) விலைச் சூத்திரமானது பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்.

(அ) ஒரு கிலோமீற்றர் அல்லது அதன் பாகத்தின் பயணத்திற்கான கட்டணம் ;

(ஆ) முதலாவது கிலோமீற்றருக்கும் முதலாவது கிலோமீற்றர் தவிர அதிகமான பயணத்தின் மேலதிக கிலோமீற்றர் ஒவ்வொன்றுக்குமான கட்டணம்; அத்துடன்

(இ) காத்திருக்க வைக்கும் காலப்பகுதிக்கான விதிப்பனவு.

(3) காத்திருக்கும் காலப்பகுதிக்கான விதிப்பனவு ஆனது கொள்கையை அடிப்படையாகக் கொண்ட கட்டண மீளாய்வுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டு வெளிப்படுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் காத்திருக்கும் காலப்பகுதிக்கான விலைச் சூத்திரத்திற்கு இணங்க கணிப்பீடுசெய்யப்படுதலும் வேண்டும்.

(4) காத்திருக்கும் காலப்பகுதியானது பயணத்தின் தொடக்க நேரத்திற்கும் முடிவு நேரத்திற்கும் இடையில் மோட்டார் முச்சக்கர வண்டி ஒரே இடத்தில் நிற்கும் போதான மொத்த காலப்பகுதி ஆகும்.

(5) மோட்டார் முச்சக்கர வண்டியின் பயணம் ஆரம்பிக்கும் புள்ளி ஆனது ஊர்திச் சலையில் இருந்தோ அல்லது பகிரங்க நிறுத்துமிடத்தில் இருந்தோ அல்லது பகிரங்க நிறுத்துமிடம் தவிர வேறு ஏதேனும் இடத்திலிருந்தோ பிரயாணிகளை எற்றிச்செல்வதற்கான வேண்டுகோளின் பேரில் அதனுடைய பயணத்தை ஆரம்பித்திருப்பதாக கருதப்படுதல் வேண்டும்.

(6) கையில் காவப்படும் செல்லப்பிராணிகள் மற்றும் பயணியினால் சுமக்கப்படும் ஆதனமொன்றுக்காக அத்தகைய வகையினதுமான மேலதிக கட்டணங்கள் என்ற வகையான விதிப்பனவு எதுவும் கட்டணத்தை விஞ்சும் வகையில் செய்யப்படுதல் ஆகாது.

(7) காத்திருக்கும் காலப்பகுதிக்கான கட்டணமும் விதிப்பனவுகளும் கட்டண மீளாய்வுக்குழுவினால் எப்பொழுதெல்லாம் அவசியமானதென தேவைப்படுத்தப்படுகின்றதோ அப்பொழுதெல்லாம் மீளாய்வு செய்யப்படல் வேண்டும்.

(8) கட்டண மீளாய்வுக்குழுவின் கூட்டமானது குறைந்தபட்சம் 6 மாதங்களுக்கு ஒரு தடவையாவது தவிசாளரினால் கூட்டப்படுதல் வேண்டும் என்பதுடன் அவர் அவசியமானதென கருதுகின்ற போதெல்லாம் கூட்டப்படுதலும் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், தவிசாளர் கட்டண மீளாய்வுக்குழுவின் நான்கு உறுப்பினர்களுக்கு குறையாதோரினால் கூட்டமொன்றைக் கூட்டும்படி எழுத்தில் கோரப்படும் போதிலெல்லாம் அவ்வாறு செய்தல் வேண்டும்.

(9) கட்டண மீளாய்வுக் குழுவினால் அலுவல்களை நடாத்துவதற்கான செயல்முறைக்கோவை, கட்டண மீளாய்வுக்குழுவின் கூட்டத்தில் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கைமுறை மற்றும் காத்திருக்கும் காலப்பகுதிக்கான கட்டணத்தையும் விதிப்பனவையும் மீளாய்வு செய்வதற்கான விலைச் சூத்திரம் என்பன போக்குவரத்து அமைச்சரினால் அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். கட்டண மீளாய்வுக் குழுவானது அத்தகைய ஏதேனும் செயல்முறைக் கோவைக்கு அமைய அதனது சொந்த நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்தலாம்.

19.இவ்வொழுங்குவிதிகளில் சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி –

“ மோட்டார் முச்சக்கர வண்டி” என்பது முச்சக்கர வண்டி பயணத்திற்கு என வடிவமைக்கப்பட்டதும் 500 கிலோகிராமை விஞ்சாத நிறை கொண்டதும் பயணிகளை ஏற்றிச் செல்வதற்கு முழுமையாகவும் பிரதானமாகவும் அமைக்கப்பட்டதுமான மோட்டார் முச்சக்கர வண்டி எனப் பொருள்படும்.

08-564

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

3-PG 001704